RECEIVED
1979-7-24
PERIODICALS DIVISION
UNIVERSITY ... LIBRARY

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No QB/8945/78

மலர்: 21 ஆடி: 8 ஷபா: 28 இதழ்: 161
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 24-7-79

இறைச்சிக்கான
கோழிகள்
BROILERS
இறுத்தல் ரூ. 7/- வீதம்
விற்பனையாகின்றன
விபரங்களுக்கு
கோகுலம்
கோழிப் பண்ணை
அளவெட்டி.
3118

## அநாதைக் குழந்தைகளுக்கு..

[கொழும்பு]
சகல மாவட்டங்களிலும் அநாதைக் குழந்தைகளுக்காக தனியான பாடசாலைகள் விரைவில் நிறுவப்படவுள்ளன. இதற்காக அரசு 10 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இத்தகவலை, சர்வதேச சிறுவர் ஆண்டுக்குப் பொறுப்பாகவுள்ள திருமதி மல்ஸிறி டயஸ் நேற்றுக்காலை தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற மாநாட்டில் வெளியிட்டார். (ம)

★ நிலையான - உறுதியான அரசு அமைப்பதில்

# மொரார்ஜி - சரண்சிங் இறுதிப் பலப்பரீட்சை!

## ராஷ்டிரபதி ரெட்டி இரண்டுநாள் அவகாசம்

### சரண்சிங்குக்கு இந்திரா காங்கிரஸ் ஆதரவு

(புதுடில்லி)

மத்தியில் நிலையான, உறுதியான அரசாங்கத்தை அமைப்பதில் தத்தமது பலத்தை நிரூபிக்குமாறு, காபந்து பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயையும், 'ஜனதா-எஸ்' கட்சியின் தலைவர் திரு. சரண்சிங்கையும் பாரத ராஷ்டிரபதி திரு. நீலம்சஞ்சிவரெட்டி நேற்று கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

இதற்கிடையே, நேற்று கடைசியாகக் கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி சரண்சிங் தலைமையை ஆதரிப்பதென்று இந்திராகாங்கிரஸ்கட்சி தீர்மானித்துள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு: மொரார்ஜிதேசாய்க்கும் திரு சரண்சிங்குக்கும் ராஷ்டிரபதி திரு. நீலம்சஞ்சீவரெட்டி நேற்று அனுப்பி வைத்த கடிதங்களில்; மத்திய நிலையான உறுதியான அரசாங்கமொன்றை அமைப்பதில் தங்களுக்குள்ள வலுவை நிரூபிக்குமாறும், லோகசபையில் எந்தக்கட்சியினருக்கு கூடுதலான அங்கத்தவர்கள் உள்ளனரோ அந்த அடிப்படையில் புதிய அரசாங்கம் அமைப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்படும் என்றும், இதற்காக இரண்டுநாள் அவகாசம் தருவதாகவும் தெரிவித்துள்ளார்.

நேற்றிரவு கிடைத்த செய்திகளின்படி, சரண்சிங்கின் "ஜனதா - எஸ்" கட்சியை ஸ்தாபன காங்கிரஸ் [சவான் கட்சி] ஆதரிக்க முடிவுசெய்துள்ளது. அதேபோல, திருமதி இந்திரகாந்தியின் வாசஸ்தலத்தில் நேற்றிரவு கூடிய இந்திராகாங்கிரஸ் கட்சியினர். சரண்சிங்குக்கு ஆதரவளிப்பதென்று முடிவு

[6-ம் பக்கம் பார்க்க]

வவனியா மாவட்டத்துடனை

## இணைப்புக்கு எதிர்ப்பு!

### ஐ. தே. க. யாழ். மா. கிளை கோரிக்கை

[யாழ்ப்பாணம்]
"அரசாங்கம் வவனியா மாவட்டத்துடன் அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை இணைத்தமையை நன்கு ஆலோசனை செய்து; மீண்டும் இப்பிரிவுகளை பழைய மாவட்டத்துடன் இணைக்கவேண்டுமென கோருகின்றோம்."

இவ்வாறு கோரும் முக்கிய தீர்மானங்கள் அடங்கிய மகஜரொன்றை, யாழ் மாவட்ட ஐ தே கட்சிக் கிளை நிறைவேற்றி, இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ளது. இம் மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"ஐ தே க, யாழ் மாவட்டக்கிளை தமிழ்மொழியை தேசிய மொழியாக்கியதை நயப்பதுடன் அரசாங்க ஊழியர்கள், அரசகருமமொழியில் போதிய தேர்ச்சியடையாவிடினும், அவர்களுடைய பதவிஉயர்வையும் சம்பள உயர்வையும் வழங்குமாறு கோருகின்றது.

[6-ம் பக்கம் பார்க்க]

## புங்குடுதீவுகண்ணகி அம்மன் தேர் வெள்ளோட்ட திருவிழா

[புங்குடுதீவு]
புங்குடுதீவு கிழக்கு கண்ணகி அம்மன் என வழங்கும் ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா தேர்த்திருவிழாவான இம்மாதம் 27ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-05 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

யாழ் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய அதிபர் ஆறுமுகம் ஜீவரத்தினமும் சகோதரர்களும் இச்சித்திரத்தேரை உருவாக்கி உள்ளனர்.

தேர்த்திருவிழா வியாழன் பகல் 1-05 மணிக்கு நடைபெறும் [ம]

தமிழ்க்காங்கிரஸ் மாநாட்டை

## தடைசெய்யக் கோரி

### தாக்கலான மனு நிராகரிப்பு

[யாழ்ப்பாணம்]
தமிழ் காங்கிரஸ் மாநாட்டைத் தடைசெய்ய இடைக்கால தடைஉத்தரவு வழங்குமாறுகோரி விண்ணப்பிக்கப்பட்டமனு நிராகரிக்கப்பட்டது.

இம்மனு யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசிர்வாதம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு நேற்றுக் காலை தீர்ப்பு வழங்கப்பட்டது.

இம்மனு கடந்த வருடம் இறுதிப்பகுதியில் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. தமிழ் காங்கிரஸ் மாநாட்டை திரு. குமார் பொன்னம்பலம், திரு. ரி சங்கரப்பிள்ளை, திரு ரி. பரமானந்தராசா, திரு. என். சுப்பிரமணியம் ஆகியோர் நடத்தக் கூடாதென இடைக்கால தடைஉத்தரவு வழங்குமாறு கோரி, நல்லூர் எம். பி. திரு ரி. சிவசிதம்பரம், வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், வட்டுக்கோட்டை எம் பி திரு ரி திருநாவுக்கரசு ஆகியோர் மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

1ம் எதிர்மனுதார் திரு குமார் பொன்னம்பலம் சார்பில் சட்டத்தரணி எம் ஆர் கனகநாயகம், சட்டத்தரணி ஆர் என் சிவப்பிரகாசம், சட்டத்தரணி எம் எஸ் சுந்தரலிங்கம், சட்டத்தரணி செல்வி

[6-ம் பக்கம் பார்க்க]

"மனுதார்கள் நீக்கப்பட்டதை

## நீதிமன்றத்தின்கவனத்திற்கு கொண்டுவந்திருக்கவேண்டும்

### தமிழ்க்காங்கிரஸ் வழக்குதீர்ப்புவிபரம்

[யாழ்ப்பாணம்]
மனுதார்களான திரு எம். சிவசிதம்பரம், திரு. ரி சிவசிதம்பரம் ஆகியோர் 3-9-78ல் நடந்த கூட்டத்தில் நீக்கப்பட்டது அவர்களுக்கு நேரடியாக தெரியாதென்றாலும் அவர்கள் அதனை வேறுவழியால் அறிந்திருந்தபடியால், அவற்றை ஆரம்பத்தில் வெளிப்படையாக தங்கள் விண்ணப்பத்தில் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கவேண்டும். அப்படி செய்யாதபடியினால் இந்த இடைக்கால தடைஉத்தரவை பெறமுடியாது"

தமிழ்க் காங்கிரஸ் மாநாட்டை தடைசெய்து

[6-ம் பக்கம் பார்க்க]

க. பொ. த. (உயர்தரம்)
விஞ்ஞானபாடங்கள்
1980 April 1980 August
ஆரம்பம்:- 1-8-79
விலங்கியல் - தாவரவியல் - தூயகணிதம்-பிரயோககணிதம்-பௌதிகம்-இரசாயனம்
யாழ்.முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.
Accountancy
57, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடிச்சந்தி
யாழ்ப்பாணம்.
3113

# "நாயன்மார்கள் காட்டிய வழியில்நாம்போகவேண்டும்'

## – பிர. இரத்தினசபாபதி

[யாழ்ப்பாணம்]

"சைவசமயம் மெய்ச்சமயம். பக்தியோடு ஆண்டவனைப் பாடி, எல்லா இடர்களையும் களைந்த நம் நாயன்மார்கள் காட்டிய வழியில் நாம் போகப் பிரயப்படாமல் தவித்திரராகிவிட்டோம் "

இவ்வாறு யாழ்ப்பாணம் தாதிமார் பயிற்சிக்கல்லூரியில் "ஆத்மீக சன்மார்க்கக் கல்வி' என்ற தலைப்பில் உரையாற்றிய பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமச் செயலாளர் திரு பிர இரத்தினசபாபதி குறிப்பிட்டார்

கல்லூரி அதிபர் திருமதி வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. இரத்தினசபாபதி தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"இந்த உலகம் அற்புதமானது. இதைப் படைத்த இறைவன் அதைவிட அற்புதமானவன். இக்கருத்தை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் மனதில்வைத்துச் சொன்னார்!

"எல்லோரும் ஒரு மந்திர வித்தைக்காரன் செய்யும் வித்தைகளைப் பெரிதுபடுத்திப் பேசுவார்கள் ஆனால் ஒருவரும் அவனைப் பற்றிப் பேசுவதில்லை " இதைப் போலவே உலக சிருட்டியைப் பற்றி எல்லோரும் வியப்படைகின்றோம். ஆனால் உலகைப் படைத்த கடவுளிடத்தில் நமக்கு நெருங்கிய தொடர்பு கிடையாது.

"நாம் வாழ்க்கைப் பாதையை மாற்றினால் அல்லாது நமக்கு விமோசனம் கிட்டாது. பராசக்தி இவ்வுலகத்தை வெகு அழகாகப் படைத்துக் காத்து, பின்பு அழித்துவிடுகிறாள். இவள் நமக்குத் திருவருள் பாலிப்பாளானால் வாழ்க்கை இன்பகரமாக அமையும்; உலகில் எல்லாம் இனிது நிறைவேறும். சர்வமும் சக்திமயமே'' என்றார்.

இந்து மாமன்றச் செயலாளர் நன்றி கூறினார். [கு]

---

## கோண்டாவிலில் பிரசவவிடுதி

### கட்டடவேலை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர்த் தொகுதியில் நீண்டகாலமாக நிலவிய பிரசவவிடுதி இல்லாக் குறை விரைவில் தீர்த்துவைக்கப்படவிருக்கிறது!

பிரசவவிடுதிக்கான கட்டடம் கோண்டாவில் அரசினர் வைத்தியசாலை வளவில் இப்பொழுது அமைக்கப்பட்டு வருகிறது.

இப்பிரசவ விடுதி அமைப்பதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து இரண்டு லட்சத்து இருபத்திஐயாயிரம் ரூபாவை நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு எம் சிவசிதம்பரம் ஒதுக்கியுள்ளார் [கொ]

---

## இன்றைய பலன்

ஆடிமாதம் 8ம் திகதி
[செவ்வாய்க்கிழமை]
(24-7-1979

**மேடம்:** கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும், எதையும் துரிதமாகச் செய்வீர் வெற்றி காண்பீர்கள், சிலருக்குநன்மையான இடமாற்றம் ஏற்படலாம், தெய்வத்தின் துணையுமுண்டு

**இடபம்:** மதிப்பு உயரும், இல்லறத்தில் இனிமை தவழும், அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், எவ்வித சிக்கலான பிரச்சினையையும் பேச்சுவன்மையினால் சமாளித்து விடுவீர்கள்.

**மிதுனம்:** மனக்கவலைகளுக்கு இடமளிக்கும், கடமையில தடை ஏற்படும், மேலதிகாரிகளைப் பகைத்துக்கொள்ளுவீர், மதுபானத்தைத் தவிர்க்கவும்.

**கடகம்:** குழுறும் நெஞ்சுடன் நாளைக் கடத்துவீர்கள், சிறு விடயத்துக்குக்கூட மற்றவர்கள் குறைகூறுவார்கள், வாதரோகத்திற்கு இடமளியாது சுகாதாரமாக நடந்து கொள்ளவும், சுமாரான நாள்.

**சிங்கம் :** சமயோசிதமான நடவடிக்கைகள் மூலம் எதையும் சமாளித்துக் கொள்ளுவீர்கள், இல்லறத்தில் அமைதிநிலவும், பூமியால் இலாபமுண்டு, பேச்சுவார்த்தைகள் இன்று நல்ல பயனை அளிக்கும்.

**கன்னி:** எதிர்பாராத பிரயாணம் இன்று ஏற்படலாம், முன்னாள் ஆசிரியர் ஒருவரின் அறிமுகம் உங்களுக்கு வசதிகளைத் தேடித்தரும்.

**துலாம்:** நினைத்தது நடக்காது, நிதியில் முடக்குமுண்டு, பூமிப்பிணக்கும் தலைகாட்டக்கூடும், அதிகசிந்தனை தலையிடியைக் கொடுக்கும், உடல்நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

**விருச்சிகம்:** அறவழியில் நாட்டம் செல்லும், வேதாந்த சிந்தனைகள் தலை தூக்கும், இரக்கசிந்தையின் மூலம் பொருட்செலவுண்டு, சுற்றமனிதர்களின் வாழ்த்தும், அன்பும் கிடைக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த முடிவில ஏமாற்றம் தென்படும், உடன் பிறந்தவர்களாலேயே பலதோல்லைகள் தோன்றக்கூடும், சிலரின் கெடுபிடி நடவடிக்கை ஆத்திரத்தை ஏற்படுத்தலாம்,

**மகரம்:** பொன்னான சந்தர்ப்பமொன்றுஉங்களைப் பூரிப்படையச் செய்யும், தேடிய உறவு உங்களை நாடியே வரலாம், இளம் பருவத்தினருக்கு இன்று இன்பப்பூங்கா, பறந்து வரும் கடிதம் உங்களைப் பரவசப்படுத்தும்.

**கும்பம் :** எதிர்பார்த்த இடங்களில் தடைகள் ஏற்பட்டுவரும், தொழில்துறை அவ்வளவு திருப்தியளிக்கக் கூடியதாக இல்லை, நண்பர்களின் நச்சரிப்பு அதிகரிப்பு பிறந்தகத்தின் ஞாபகம் தலைதூக்கும் அவசரப் போக்கைத் தவிர்க்கவும்

**மீனம்** .நன்மான மிகுதிக்கு தனவரவுக்கும் இடமுண்டு, சிலருக்கு வாகன சுகமும் கிடைக்கும், குடும்பத்திலே சென்றவீசும், உறவினர்கள் படையெடுத்து வருவார்கள் கல்வியி் ... ற்றமுண்டு

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

---

## பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள்

(தெல்தேனியா)

தெல்தேனியா சிதம்பரம் தமிழ் வித்தியாலய அபிவிருத்திச் சங்கம்: தலைவர்: திரு எஸ் எம் மூர்த்தி [அதிபர்], இணைச் செயலாளர்கள்: எஸ் சி சிவநேசம், க சுந்தரமூர்த்தி, பொருளாளர்: திருமதி வி கே ரகுநாதன், துணைத்தலைவர்கள்: எஸ் பாலையா நாடார், கே நவச்சந்திரதேவர், கணக்குப் பரிசோதகர்கள்: கே பார்த்திபன் ராசு, ஸ்ரீ மகாதேவா

நிர்வாகசபை உறுப்பினர்களாக 6 பேர் தெரிவு செய்யப்பட்டனர் [கு]

0 0 0

(சாவகச்சேரி)

போக்கட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அபிவிருத்தி சங்கம்: தலைவர்; திரு பொ நடேசன் [அதிபர்], உப தலைவர்: வே கிட்ணன், செயலாளர்: க இராசலிங்கம், உப செயலாளர்; பி வரப்பிரகாசம், தனாதிகாரி: திருமதி மே றோ பிரான்சீஸ் [ஆசிரியை], நிர்வாகசபை உறுப்பினர்கள்: வ செல்லத்துரை, ஆ கிட்ணன், பி அருளானந்தம், வெ பீலிக்ஸ் போல் [கு]

ஃ ஃ ஃ

[வண்ணார்பண்ணை]

மண்டைதீவு கார்த்திகேய வித்தியாசாலை பாடசாலை அபிவிருத்திச்சங்கம்:

தலைவர்: திரு எஸ் நடராசா (அதிபர்), உபதலைவர்: திரு த நடேசமூர்த்தி, செயலாளர்: திரு கு க நடராசா, உபசெயலாளர்: திரு செ வி ஸ்ரீ பத்மராசா, பொருளாளர்: திரு க சிவப்பிரகாசம் ஆசிரியர்

12 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது: [கு]

ஃ ஃ ஃ

[புலோலி]

புலோலி புற்றளை மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சங்கம்:

தலைவர்: இ தர்மலிங்கம் (அதிபர்), உபதலைவர் வே சோமசுந்தரம், பொதுச்செயலாளர்: வே வி செல்வராசன், துணைச்செயலாளர்: க சதாசிவம், பொருளாளர்; க சந்தையா ஆகியோருடன் 5பேர் கொண்டஆலோசனைக்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது, [கு]

ஃ ஃ ஃ

[வேலணை]

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கம்.

தலைவர்: திரு மு திருஞானசம்பந்தபிள்ளை [அதிபர்], செயலாளர்: திரு ஆ பொ பரராஜசிங்கம், பொருளாளர்; திரு சி கணபதிப்பிள்ளை. இருபத்தொருபேர் கொண்ட நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.. [கு]

ஃ ஃ ஃ

[மானிப்பாய்]

கொல்லங்கலட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்:

தலைவர்: திரு வ மகாலிங்கம் [அதிபர்], உபதலைவர்: திரு வே தனபாலசிங்கம், இணைச் செயலாளர்கள்: திரு வ சரவணமுத்து, திரு நா போஜன் பொருளாளர்: திரு. ஏ சுப்பிரமணியம்.

---


## வரி விளம்பரம்

### தேவை

பீடிசுற்றுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை ஆயிரம் பீடி சுற்றுவதற்கு 10ருபா சம்பளம் வழங்கப்படும் நேரில் தொடர்பு கொள்க 867, நாவலர்வீதி, (இலுப்பையடிச்சந்தி) யாழ்ப்பாணம் 3106

அழகு சாதனப் பொருட்கள், பாத அணி வகைகள் முதலியனவற்றில் நன்கு வியாபார அனுபவம் உள்ள நற்பழக்கம் உள்ள விற்பனையாளர்கள் தேவை விபரங்களுக்கு நேரில் வரவும் நாதன்ஸ் நவீன சந்தை, யாழ்ப்பாணம், போன்: 7540. (3119)


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை

மரணசாதன நியாயாதிக்கம் இல: 1077/7

காலஞ்சென்ற புலோலி தெற்கு சேனாதிராஜசேகரம் கைம்பெண் இலட்சுமிப்பிள்ளை என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்
—மரணமெய்தியவர்

சேனாதிராசசேகரம் ஏகாம்பரநாதன்
புலோலிதெற்கு, புலோலி
—மனுதாரர்

எதிர்

சேனாதிராசசேகரம் கணேசராசா
புலோலிதெற்கு புலோலி
—எதிர் மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆடு ஆவணி மீ 24ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம்
க: விஸ்வலிங்கம்,
பதிவாளர்.

1979 ஆடு ஆனி மீ 18ந் திகதி.

இராமசுவாமி சதானந்தன் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸும், புலோலி தெற்கு, புலோலி. 3095


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


---

## கோட்டு விறபனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழக்கு இலக்கம்: சடு 918

1 சின்னப்பு தம்பித்துரை மகள் சிவருடவதி.
திருநெல்வேலி,
—வழக்காளி

எதிராக

1. கார்த்திகேசு குணரத்தினம்
ஆலடி ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் சடு 918ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1979ம் ஆண்டு ஆவணி மாதம் 17ந் திகதி முற்பகல் 10-30 மணிக்கு என்னால் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 5820-83 சதம். மேலும் ரூபாய் 5000/-க்கு 9-6-78 தொடக்கம் 23-11-78 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 15 வீத வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 546-10 சதம்.

### குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்குஇறை [அ] ஆச்சுவேலிபுலம் நில பர 90 குழிச்சொரியலாய் 1/6 பங்கு இதே காணி நிர்ணயப்படுத்தப்பட்டு "ஆச்சிலைப்புலம்" நில பர 12குளி 9 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாண பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறையிலுள்ள என்று விபரிக்கப்பட்டு D422/110ல் பதியப்பட்டுள்ளது. இதற்கு வடக்குமூலையிலுள்ள 12 அடி அகலப் பாதையும் போக்குவரவு செய்வதற்குச் சேர்க்கப்பட்டுள்ளது. பகுதி, கோவிற்பற்று இறை ஆகியன பிழையாக விபரிக்கப்பட்டுள்ளது.

[ஆ] இச்சிலைப்புலம் நில.பர 16½ குழி அளவின்படி நில பர 13 குளி 11½ இதில வடக்குமூலையாக 12 அடி அகல பாதை நில குளி 5 உம் கிழக்குப்பக்கமாக நில.பர 6 குளி 5,50உம் நீக்கி மிகுதியில் தெற்குப்பக்கமாக நில.பர. 6 குளி 5 50

இதுவடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலியிறையென விபரிக்கப்பட்டு டி 416/6ல் பதியப்பட்டுள்ளது. இதற்கும் இதன் வடக்கேயுள்ள 12 அடி அகலப்பாதை போக்குவரத்துக்காக விடப்பட்டுள்ளது பகுதி கோவிற்பற்று இறை ஆகியன பிழையாக விபரிக்கப்பட்டுள்ளன.

இவ்விரண்டும் (அ)வும் (ஆ)வும் சேர்ந்து ஒரு முழுக்காணி "இச்சிலைப்புலம்" நில பர: 18 குளி 14.50: இது ந. தேவராசனால் 3-5-75ல் அளந்து விபரித்த 1393ம் இலக்கப் படத்தின்படி நில பர; 17 குளி14 50 இந்த நில பரப்பு 17 குளி14 50 மேற்குப்பக்கமாக நில பர18 குளி16 25. இது குறித்த படத்தில் துண்டு 1, இந்த நில பர 8 குளி 16 25 செய்பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு: இக்காணிக்கும் மிகுதி கிழக்கெல்லைக்காணிக்கும் பொதுப்பாவிப்புக்காக விடப்பட்ட 12 அடி அகல ஒழுங்கையும் (துண்டு 3ம் துண்டு 4ம்) விற்பனவுக்காரரின் மிகுதியாதனம் (துண்டு 2) வடக்கு: சிவஞான இரத்தினசிங்கமும் பெண் சகுந்தலாதேவியின் ஆதனமும், மேற்கு: சண்முகம் இரத்தினசபாபதியும் பங்காளரின் ஆதனம், தெற்கு: பொன்னையா பூபாலசிங்கமும் மறுபேரின் ஆதனமும் இதடங்கலும் கிழக்கேயிருக்கும் றோட்டுக்குப் போக்குவரவு செய்து பாவிப்பதற்கு மிகுதிக் கிழக்கெல்லை காணிக்காரருடன் சேர்ந்து குறித்த படத்தில் உள்ள 3ம் 4ம் துண்டுகளைப் பாவிக்குமுரித்துமுடைய. முற்றி திவு D 416/6.

ப. நா. தருமலிங்கம்
கொம்மிசனரும் ஏலவிற்பனையாளரும்

167/1 கோவில் வீதி
நல்லூர்.
23-7-79

3117

---


விற்பனையாகின்றது

**G. C .E. A/L**

ஆகஸ்ட் 1979 பரீட்சைக்குரிய

**புவியியல் மாதிரி வினாவிடை**

(முன்னோடி வினாத்தாள்களுக்குமுரிய விடைகளும் அடங்கியது)

(க. குணராசா ஆக்கியது)

V P P உண்டு

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 3116

## மக்கள் கருத்து

### சினிமாக் காட்சி நேரங்களில் மாற்றம் வேண்டும்

தற்போது வடபகுதியிலுள்ள சில தியேட்டர்களின் காட்சிநேரங்கள் மாற்றப்பட்டுள்ளன. தினசரி இரவு வழமையான 9 30 காட்சி நீக்கப்பட்டு தற்போது 3-30, 6-30 காட்சிகளாக தினசரி இரு காட்சிகள் காண்பிக்கப்பட்டு வருகின்றன. இது தற்காலிக ஏற்பாடாகும்.

எனினும் இது எவ்விதத்திலும் நன்மைபயக்கக்கூடிய ஏற்பாடானபடியால் இக்காட்சி நேரங்கள் நிரந்தரமாக்கப்படுவதுடன், இலங்கையிலுள்ள சகல தியேட்டர்களுக்கும் இப்புதிய நேர அட்டவணையை நடைமுறைப்படுத்துதல் இக்காலகட்டத்தில் மிகவும் அவசியம்.

இரவு இரண்டாவது காட்சியினால் தீமைகளே அதிகம் ஏற்படுகின்றன. இக்காட்சியை நித்திரைவிழித்துப் பார்ப்பதால் கண்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. ஆரோக்கியமும் இதனால் பாதிக்கப்படுகின்றது. திருட்டு, கொள்ளை முதலிய வன்செயல்களுக்கும் இந்த இரண்டாவதுகாட்சி இடமளிக்கிறது. ஆகையால் இக்காட்சி உடன் நிறுத்தப்பட வேண்டியதொன்றாகும்.

யாழ். நகரிலுள்ள தியேட்டர்களில் பாடசாலை மாணவரின் நலனை உத்தேசித்து பகல்காட்சிகளை ரத்துச்செய்வதற்கு ஆலோசனை நடைபெறுவதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது. இவ்வேற்பாடும் நன்மை பயக்கக்கூடியதே, மாலை 3-30, 6-30 காட்சிகளால் பாடசாலை மாணவரும் சரி, எவரும் பாதிக்கப்பட மாட்டார்கள். இப்புதியநேர மாற்றத்தை எல்லோருமே விரும்பிவரவேற்பர் என்பதே எனது எண்ணம். சம்பந்தப்பட்டவர்கள் கலந்துபேசி இப்புதிய காட்சிநேரங்களை அமுல்படுத்துவார்களேயானால் நாட்டில் நடைபெறும் வன்செயல்களும், நன்மைக்குப்புறம்பான காரியங்களும் தானாகவே தடுக்கப்பட்டுவிடும், இது திண்ணம்.

கே. எஸ். குமார்
கஞ்சாம்பாதி,
கரவெட்டி.

ஃ ஃ ஃ

### மந்திகை ஆஸ்பத்திரியில் உணவு விநியோகம்

20-7-79ந் திகதிய மக்கள் கருத்துப் பகுதியில் மந்திகை வைத்தியசாலை உணவு வழங்கலில் உள்ள குறைபாடுகள் என்னும் தலைப்பில் ஆ. சிவஞானம் எழுதிய கருத்துக்கு கீழ்க்காணும் எனது விளக்கத்தை வைத்தியசாலையின் வார்ட் பரிசாரகர் என்ற வகையில் இக்குதருகிறேன்.

எமது வைத்தியசாலைவிடுதியில் நாம் நோயாளர் உணவை மிகுந்த கௌரவத்துடனும், பொறுப்புணர்ச்சியுடனும் வழங்குகின்றோம். நோயாளர் எந்தக்காரணம் கொண்டும் உணவுக்காக விழுந்தடித்துக்கொண்டு (கருத்தில் கூறியது போல்) விடுதிக்கு வெளியில் செல்வதில்லை. விடுதிக்குள் ஒரு பகுதியிலேயே உணவுபரிமாறப்படுகின்றது: உணவு வைத்துத்தள்ளும் வண்டிபோன்ற வசதி எமது வைத்தியசாலையில் இருக்குமானால் உணவை நோயாளர் கட்டில்களில் கொண்டுசென்று கொடுப்பது தான் எமக்கு மிகமிக இலகுவாக இருக்கும். அதனால் எமக்கேற்படும் பல சிரமங்களும் குறையும்.

இப்படிக்குறைகள் இருந்தாலும் நோயாளர் உணவை வைத்து உண்பதற்காக நியமிக்கப்பட்ட ஆசனங்கள் உள்ள

5ம் பக்கம் பார்க்க

# தொகுதி அபிவிருத்தியில் பிரதமர்காட்டும் நேர்மை

## காங்கேசன்துறையில் அமிர் பாராட்டு

[மாவிட்டபுரம்]

"ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று வித்தியாசம் பாராது சகல எம். பிக்களது தொகுதிகளுக்கும் நீதியான முறையில் திட்டங்களைப்போட்டு நிறைவேற்றும் பிரதம மந்திரியை நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். தமது அமைச்சு உத்தியோகத்தர்களுக்குக் கூட அவர் எந்தத் தொகுதியையும் புறக்கணிக்கக் கூடாது என உத்தரவிட்டுள்ளதாக அறிந்தேன். இந்த விஷயத்தில் பிரதமர் மிகவும் நேர்மையாக நடந்துகொள்கிறார்"

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் காங்கேசன்துறைத் தொகுதியில் தொகுதிரீதியான வீடமைப்புத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட 10 வீடுகளையும் வீடற்ற ஏழைமக்களுக்குக் கையளித்து உரையாற்றுகையில் கூறினார்.

காங்கேசன்துறைத் தொகுதியில் அளவெட்டி - மல்லாகம் வீதியில் அமைந்துள்ள இந்த 10 வீடுகளையும் யு. மகேசன், வி. பொன்னுத்துரை, எஸ். முருகையா, ரீ. சிவலிங்கம், எல். மரியநாயகம், திருமதி வி. சிதம்பரப்பிள்ளை, வி. தர்மபூபதி, பி. சரசு, எம். செல்லம்மா, எம். இராஜதுரை ஆகிய 10 பேருக்கும் திரு அமிர்தலிங்கம் கையளித்தார். இதில் அறுவர் அளவெட்டியையும் நால்வர் மல்லாகத்தையும் சேர்ந்தவர்கள்.

வீடுகள் கையளிப்பதற்கு முன்னர் வைத்திய கலாநிதி மு. வேதாரணியம் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில், இன்றைய நிலையிலே கிராமமட்டத்திலே மக்களிடையே கட்டுப்பாடு இருக்க வேண்டும். கிராம மட்டத்திலே ஒரு தலைமையை ஏற்படுத்தித் தமது தேவைகளைத் தாமே நிறைவேற்றும் நிலையில் கட்டுக்கோப்பாக இயங்கினால் பொலிசுக்கோ, நீதிமன்றத்திற்கோ சென்று இன்னல்பட்டத் தேவையில்லை" என்றார்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு ஜெகநாதன், வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே மகாதேவா, சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு, திருமதி அமிர்தலிங்கம் உட்பட பலர் பேசினர்.

### இன்றைய உற்சவம்

(பாழ்ப்பாணம்)

வண்ணை வைத்தீஸ்வர சிவன் கோவில் தேவி மகோற்சவ 7ந் திருவிழா இன்று நடைபெறுகிறது. தேவி இன்று இரவு 6 மணிக்கு நாகவாகனத்தில் வீதி உலா வருவார். தேர்த் திருவிழா 26 ந் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். [செ]

### மாவை உற்சவம் பூர்த்தி

[மாவிட்டபுரம்]

சரித்திரப் பிரசித்திவாய்ந்த மாவைக்கந்தன் ஆலயப் பஞ்சரத மகோற்சவம் நேற்று முன்தினம் விமரிசையாக நடைபெற்றது.

வழமைத்திலும் பார்க்க இம்முறை பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடியிருந்தனர். ஆட்டக் காவடிகள் ஏராளமானவை கோவிலை வந்தடைந்ததுடன், 4 பறவைக் காவடிகளும் வந்தன.

ஜன நெரிசலில் திருட்டுக்கள், அசம்பாவிதங்கள் நடைபெறுதிருக்க காங்கேசன்துறை பொலிசார் நடவடிக்கை எடுத்திருந்தனர். வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவாவும் பக்தர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் தேர்த்திருவிழா நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்தனர்.

திருட்டில் ஈடுபட்ட சில பேர்வழிகள் பொலிசாரிடம் மாட்டிக்கொண்டனர்.

நேற்று அதிகாலை மாவை ஆலய மூர்த்திகள் கீரிமலைக்கு எழுந்தருளி, கீரிமலைச் சிவன்

(5-ம் பக்கம்பார்க்க)


**மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் நிறுவனம் தமது இரண்டு வருட வைப்புகளுக்கான சேமிப்பு ஊக்குவிப்புத் திட்டத்தினை புதிய அம்சங்களுடன் மறு அறிவித்தல் வரை நீடித்திருக்கிறது என்பதனை அறியத்தருகிறது.**

மாதாந்தம் வழங்கும் **24%** வருடவட்டி பெறும் 2வருட.சேமிப்புத் திட்டம்

| வைப்புத்தொகை | மாதாந்தம் செலுத்தப்படும் போனசுடன் கூடிய வருடவட்டி |
|---|---|
| ரூபா 2,500 முதல் ரூபா 25,000 ம் குறைய | 18% |
| ரூபா 25,000 முதல் ரூபா 50,000 ம் குறைய | 19% |
| ரூபா 50,000 முதல் ரூபா 100,000 ம் குறைய | 22% |
| ரூபா 100,000 ம் மேல் | 24% |

MASTERS

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் இலங்கையிற் பெரியதும், உறுதிவாய்ந்ததும் உங்கள் பணத்திற்கு அதி உயர்ந்த பாதுகாப்பை வழங்குவதுமான ஓர் நிதி நிறுவனம்.

- மொத்த ஆதனம் ரூ. 116,000,000/- க்கும் மேல்
- மூலதனமும் ஒதுக்கீடும் ரூ. 7,200,000/- க்கும் மேல்
- வைப்புக்கள் ரூ. 75,000.000/- க்கும் மேல்

ஆகவே, உங்கள் சேமிப்புகளுக்கு அதிக பலனைப்பெறும் நோக்கம் உண்டானால் இன்றே கொழும்பில்உள்ள மெர்க்கன்டைல் கிறெடிட்டில் அல்லது அதன் எந்தவொரு கிளை நிலையத்திலும் மேலதிகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்**
(நிதிப் பிரிவு)
51-53 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1,
கிளை நிலையங்கள்:
யாழ்ப்பாணம்: 11/9, ஸ்ரான்லி வீதி, தொலைபேசி: 321
மாத்தறை: 27 1 /1. தர்மபால மாவத்தை, தொலைபேசி: 2466
அனுராதபுரம்: 2, ஹரிஸ்சந்திர மாவத்தை, தொலைபேசி: 534
கண்டி: 901/A, பேராதனை வீதி, தொலைபேசி 4196
ஏஜன்ட்மார் ஏனைய முக்கிய நகரங்களிலும் உள்ளனர்

ஜனதா தலைவர்பதவி இழுபறி நீங்கியது

# தேசாயே தலைவர்என்கிருர் ஜெகஜீவன்

## சமரசம் குறித்து சந்திரசேகர் மகிழ்ச்சி

புதுடில்லி, ஜூலை 23

இந்திய ஆளும் ஜனதா கட்சித் தலைமை பதவிக்கான இழுபறி, முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

காபந்து பிரதமரும் பாராளுமன்றக் குழுத்தலைவருமான திரு மொரார்ஜி தேசாயும் துணைப் பிரதமர் திரு. ஜெகஜீவன்ராமும் நேற்று நடத்திய இரகசிய சந்திப்பை அடுத்து இருவருக்குமிடையே இணக்கம் ஏற்பட்டது.

திரு. தேசாயே ஜனதா கட்சியின்பாராளுமன்றக்குழுத் தலைவர் என்றும் புதிய அரசு ஒன்றை அமைக்கும் அவரது முயற்சிக்குத் தாம் தடையாக இருக்கப் போவதில்லை என்றும் திரு ஜெகஜீவன்ராம் தெரிவித்துள்ளார்.

சந்திரசேகர் மகிழ்ச்சி

திரு. தேசாய்க்கும் திரு. ஜெகஜீவன்ராமுக்கும் இடையே ஏற்பட்ட இணக்கத்தையிட்டு ஜனதா கட்சித் தலைவர் திரு சந்திரசேகர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்

அனுபவமும் முதிர்ச்சியும் கொண்ட ராஜதந்திரிகளான இருதலைவர்களும் தமது கடமைப் பொறுப்புக்களை நன்கு உணர்ந்துள்ளனர் என்று திரு சந்திரசேகர் சென்னையில் பத்திரிகைநிருபர்களிடம் கருத்து தெரிவிக்கையில் கூறினர்.

ஜனதா ஆட்சிக்கு

## ஆதரவுதருவதாக எம்.ஜி.ஆர் என்றே உறுதி கூறினர்

தமிழக முதல்வர் திரு. எம் ஜி. இராமச்சந்திரனை சென்னையில் மரியாதையின் நிமித்தமே தாம் சந்தித்துப்பேசியதாகவும் தெரிவித்த திரு சந்திரசேகர்

மத்தியில் ஆட்சி அமைக்க ஜனதா கட்சிக்கே தாம் ஆதரவளிப்பதாக திரு. இராமச்சந்திரன் நீண்ட நாளைகளுக்கு முன்னரே தம்மிடம் உறுதி அளித்ததாகக் கூறினர்.

மத்தியில் உள்ள அரசியல் நெருக்கடிக்கு இன்னும் ஓரிரு தினங்களில் தீர்வுகாணப்பட்டு விடும் என்றும் திரு. சந்திரசேகர் தெரிவித்தார். [இ]

# சரண்சிங்குக்கு

## இந்திராகாங்கிரஸ் ஆதரவு

புதுடில்லி, ஜூலை 23

நிலையான ஆட்சி அமைக்க முயலும் 'ஜனதா எஸ்' கட்சித்தலைவர் திரு சரண்சிங்குக்கு இந்திரா காங்கிரஸ் கட்சி ஆதரவளிக்கும் என்று ஆந்திரப் பிரதேச முதல்வர் டாக்டர் சென்னாரெட்டி தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வகாங்கிரஸ்- 'ஜனதா எஸ்' தேர்தல் உடன்பாட்டை தாம் ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்தார். [இ]

## இன்றைய நெருக்கடி அரசியல்அமைப்புக்கு முரண்

### கிருபளானி கருத்து

சென்னை, ஜூலை 23

இன்றைய அரசியல் நெருக்கடி தொடர்பான சம்பவங்கள் இந்திய அரசியல் சாசனத்திற்கு மட்டுமல்ல, தார்மீக நெறிக்குமே முரணானதாகும்.

இவ்வாறு ஆச்சார்யா கிருபளானி தெரிவித்துள்ளார்

இந்தியத் தலைவர்களின் பரிபக்குவமற்ற தன்மையையும் கண்ணியக் குறைவையுமே இது காட்டுகிறது என்றும் கிருபளானி தெரிவித்தார்.

### கம்யூனிஸ்ட் கண்டனம்

புதுச்சேரி, ஜூலை 23

புதுச்சேரியில் அடுத்த மாதம் நடைபெறவிருந்த சட்டசபைத் தேர்தலை தேர்தல் ஆணையாளர் காலவரையின்றி ஒத்திவைத்தமையை இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின்புதுச்சேரிக்கிளை வன்மையாகக் கண்டித்துள்ளது. [இ]

## ஜனதா ஆட்சிக்கு வந்தால் காங்கிரஸ் எதிர்க்க முடிவு!

### — உன்னிகிருஷ்ணன்

புதுடில்லி, ஜூலை 23

இந்தியாவில் ஜனதா கட்சி மீண்டும் பதவிக்கு வருவதை எதிர்க்க உத்தியோகபூர்வ காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

இம்முடிவை காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்றக்குழுவின் காரியதரிசிதிரு.கே. பி உன்னிகிருஷ்ணன் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இந்தியாவில் மதசார்பற்ற சமதர்ம ஜனநாயக சோஷலிசக் குழு ஒன்று ஆட்சி அமைக்கும்பட்சத்தில் தமது கட்சி ஆதரவளிக்கும் என்றும் திரு. உன்னிகிருஷ்ணன் தெரிவித்தார். [இ]

பிரதமர் பதவியையே

## நோக்கமாகக்கொண்ட எவருக்கும் ஆதரவில்லை!

### பாலாபழனூர் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 23

பிரதமர் பதவியையே நோக்கமாகக் கொண்டுள்ள எவருக்கும் ஆதரவளிப்பதாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அகாலிதளம், தேசிய மகாநாட்டுக் கட்சி ஆகியவை வாக்குறுதி அளிக்கவில்லை.

இவ்வாறு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்றக் குழுத் தலைவர் திரு. பாலாபழனூர் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசியலில் ஒரு தெளிவான நிலை உருவாகும் வரை இக்கட்சிகள் காத்திருக்கின்றன என்றும் திரு. பழனூர் தெரிவித்துள்ளார். [இ]

## வெள்ளத்துக்கு 78 பேர் பலி!

புதுடில்லி, ஜூலை, 23

ஒரிஸாவில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் இதுவரை 78 பேர் பலியானார்களென்று அறிவிக்கப்பட்டது.

## ஆஸ்பத்திரியில் ஜெயப்பிரகாஷர்

பம்பாய், ஜூலை. 23

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு கடந்த இரவு மூச்சுவிடச் சிரமப்பட்டு அவஸ்தையுற்ற திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண், இன்று காலை சுகத்துடன் இருந்தாரென அறிவிக்கப்பட்டது.

அவருக்கு கடந்த இரவு வயிறுவலியும்ஏற்பட்டதாம். [இ]

## பெங்களூரில் எம். ஜி. ஆர்.

பெங்களூர், ஜூலை. 23

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இன்று பெங்களூரில் கர்நாடக முதல்வர் திரு தேவராஜ்அர்ஸுடன் இன்றைய அரசியல் நெருக்கடி குறித்து பேச்சு நடத்தினர்.

இங்கிருந்து திரு. இராமச்சந்திரன் புதுடில்லிசெல்கிறார். [இ]

## 3 மாதங்களில் இடைக்காலத் தேர்தல்?

புதுடில்லி, ஜூலை, 23

இந்தியாவில் இடைக்காலத் தேர்தல் அவசியமானல் இன்னும் மூன்றுமாத காலத்திலதை நடத்துவது சாத்தியமாகும்.

இவ்வாறு இந்திய சட்டமந்திரி திரு. சாந்திபூஷண் தெரிவித்துள்ளார். (இ)

## உப ஜனுதிபதி தேர்தல் ஒத்திவைப்பு

புதுடில்லி, ஜூலை, 23

ஆகஸ்ட்மாதம் 25ம் திகதி நடைபெறவிருந்த உப ஜனுதிபதி தேர்தல் 27ம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக இந்திய தலைமைதேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். [இ]

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் அமுலிலிருக்கும் பத்திரிகை தணிக்கை சம்பந்தமான மாநாடு இன்று பிற்பகலுக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது

இம்மாநாடு, யாழ்ப்பாணச் செயலகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற ஏற்பாடாகியிருந்தது குறிப்பிடத்தக்கது (கெ-அ)

## பருத்தித்துறையில் கைது

[புலோலி]

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் வீடு உடைத்துக் களவாடியது சம்பந்தமாகப் பொலிசாரினல் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் பருத்தித்துறையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சந்திரா குணரத்தின தலைமையிலான பொலிஸ் கோஷ்டி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டபோது பருத்தித்துறைப் பஸ்நிலையத்தில் வைத்து இச்சந்தேகநபரைக் கைதுசெய்தது


# ஒவ்டனேல் ஈ.சீ 50%

தரைப் பூச்சி புழுக்களையும் இலை உண்ணும் பீடைகளையும் கட்டுப்படுத்துவதில் மிகவும் சக்தி வாய்ந்தது ஒவ்டனேல். கம்பிப்புழு, வண்டினங்கள் போன்றவற்றையும் ஒவ்டனேல் ஒழித்துக்கட்டும். உருளைக்கிழங்குப் பயிரைப் பாதிக்கும் வண்டினங்களையும் நெற்சந்துக்குத்தியையும் அது சிறப்பாகக் கட்டுப்படுத்தும். ஒவ்டனேல் வேர்கள் மூலம் உறிஞ்சப்படும் தன்மை கொண்டது. ஆகையால் நிலப்பீடைகள், எறும்பு மற்றும் பூச்சு புழுக்களிடம் இருந்து அதிக பாதுகாப்பை அது வழங்குகிறது.




பாவியுங்கள்

BAYER

தரமான பீடைநாசினிகள்

ஹேக்கெம் லிமிட்டெட்.

400, டன்ஸ் வீதி, கொழும்பு 10.

தொலைபேசி: 93563, 96331-6

Mel Ads

**வெலிங்டன்** தினசரி: 10-30, 2-30, 6-30, & 9-45.
[யாழ்ப்பாணம்]
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
**ஒ ள வை ய ா ர்**

**ரிடோ** போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
[யாழ் நகர்]
**கல்யாணபரிசு**
(புதிய பிரதி)

3-வது ஜனத்திரள் நிறைந்த வாரம்!
**SHANTHI** JAFFNA Phone: 7642
10-30 2-30 4-45, & 7-10
CHARLES BRONSON in
**Mr. MAJESTYK-**
Adults - Action Packed - Color
Don't miss this action Packed movie
NEXT ATTRACTION **'Juggernaut'** Color Suspense: Thriller

கடைசி சில தினங்கள்மட்டும்
**ஸ்ரீதர்** தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, 9-45.
(யாழ்ப்பாணம்) மூன்று "ஒஸ்கா" பரிசுகள் பெற்றது.
சிறந்த நடிகன் என்ற பாராட்டுப்பெற்ற
மர்லின் பிராண்டோ
நடித்த இறந்த படங்களுக்கான பரிசைப்பெற்ற
**THE GOD FATHER**
(Adults Only - வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**மனோகரா** 10-30, 2-30, 6-30, 9-45
[யாழ் நகர்]
ஜெமினி, சாவித்திரி, நாகேஸ்வரராவ், தங்கவேலு
அஞ்சலி
**மாதர்குலமாணிக்கம்**

5-வது வாரம்
**ராணி** தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா நடித்த
**உலகம் சுற்றும் வாலிபன்**

ஈடில்லா இணையில்லா நிகரில்லா சாதனை!
100 நாட்களில் வரியுட்பட 3,51,403-75
**ராஜா இன்று 100வது நாள்**
[யாழ் பாணம்]
எந்த ஒரு பழைய படமும் ஈடுகொடுக்க முடியாதளவுக்கு வெற்றிவாகைசூடி இன்று 100வது நாளைக்கொண்டாடுகிறது
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா-சோ-அசோகன் நடித்த




ஜெமினியின் **ஒளி விளக்கு**
ஈஸ்ட்மென்கலர்
இன்றே கடைசி நாள்.
நாளைமுதல் **கொடுத்து வைத்தவள்**

# யோகேந்திராவை இசை வேளாளர் சந்தித்தனர்

[மாவிட்டபுரம்]

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த தவில் கலைஞர்களுக்கு நியாயமான விலையில் தோல் கிடைக்கச்செய்யத் தாம் நடவடிக்கை எடுப்பதாக யாழ். மாவட்டச் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்திலுள்ள தவில் கலைஞர்கள் தமக்குத் தேவையான ஆட்டுத்தோல்களை அதிக விலைகொடுத்து வாங்க வேண்டியிருப்பதாகவும் இதனால் அவர்கள் தொழிலையே விட்டுவிட சிந்தித்துவருவதாகவும் இலங்கை இசை வேளாளர் சங்கத்தின் குழுவொன்று யாழ் மாவட்ட செயலாளரை அவரது அலுவலகத்தில் சந்தித்து எடுத்துக் கூறியது.

இது குறித்துத் தாம் விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளுடனும் ஆலோசித்து நியாய விலையில் இத்தோலை தவில் கலைஞர்களுக்குக் கிடைக்க ஆவனசெய்வதாக யாழ் மாவட்டச் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி உறுதியளித்தார்.

மேற்படி தூதுக் குழுவினர் யாழ் உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி திரு எஸ். வேல்முருகுவிடம் இதுபற்றிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர். (அ)

## மாவை...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கோவில் மூர்த்திகளுடன் கீரிமலைக் கடலில் தீர்த்தமாடினார்கள். ஆடி அமாவாசை விரதத் தினமாகிய நேற்று ஏராளமானோர் கூடித் தமது பிதிர்க் கடன்களை நிறைவேற்றினர். (அ)

**ரியோ** போன்: 7607
[நகரமண்டபம்]
தினசரி: 10-30, 4-45, 7-00, 9-30
**PERCY**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**சகம்ல** [சுன்னாகம்]
தினசரி 6-45, 10-00
25ந் திகதிவரை
ஜெமினி-சாவித்திரி
**மனிதன் மாறவில்லை**

**வெஸ்லி**
[காங்கேசன்துறை]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-பத்மினி
**தூக்கு தூக்கி**

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி: யாழ். இந்துசாம்பியனானது!

[யாழ்ப்பாணம்]

வடமாகாண கிரிக்கட்சங்கத்தினரால் யாழ்-பாடசாலைகளுக்கிடையே நடாத்தப் பெற்ற 15 வயதுப்பிரிவினர்களுக்கான கிரிக்கட் சுற்றுப் போட்டியில், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சாம்பியனானது.

கடந்த 13-ம், 14-ம் திகதிகளில் பரியோவான் கல்லூரி மைதானத்தில் யாழ். இந்துக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ் இந்துக்கல்லூரி 'இன்னிங்ஸ்' வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக்கல்லூரி சகல விக்கட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது. பி கணேசன் 61 ஓட்டங்களையும், ஆர் இரட்ணராஜா 15 ஓட்டங்களையும், கே ஜி எஸ் மணியன் 11 ஓட்டங்களையும் பெற்றனர் யாழ் இந்து வீரர்களான கே மகேந்திரன் 26 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளையும், எஸ் சுரேந்திரன் 26 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களையும், ரி சுரேஷ் 53ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்

இதையடுத்துத் துடுப்பெடுத்தாடிய யாழ் இந்துக்கல்லூரி 191 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது. எஸ் ரூபானந்தசிகம் மிகத்திறமையாக ஆடி 60 ஓட்டங்களையும் ஏ உதயகுமார் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் என் சரவணபவன் 32ஓட்டங்களையும், எஸ் பகீதரன் 20ஓட்டங்களையும், கே மகேந்திரன் 15 ஓட்டங்களையும் பெற்றனர் யாழ்ப்பாணக்கல்லூரி வீரர்களான கே ஜி எஸ் மணியன் அழகரத்தினம் பந்துவீசி 48ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுக்களையும், எம் பரமலிங்கம் 45ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களையும் பெற்றனர்.

மீண்டும் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ் இந்து வீரர்களின் அபார வேகப்பந்து வீச்சுக்கும் திறமையான பீல்டிங்குக்கும் இலக்காகி 37 ரன்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது பி கணேசனும் கே ஜி எஸ் மணியனும் தலா 13 ரன்களை பெற்றனர்

யாழ் இந்துவின் முன்னணி பந்து வீச்சாளர்களான கே மகேந்திரனும், ரி சுரேஷும் வெகுசிறப்பாகப் பந்துவீசி முறையே 13 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களையும் 20 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களையும் வீழ்த்தி, யாழ் இந்துக் கல்லூரியின் வெற்றிக்கு வழிகோலினர். [கு]

## யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்சங்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கக் கூட்டம் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: அதிபர் ஈ கே சண்முகநாதன், உப தலைவர்கள்: எஸ் எஸ் இரத்தினசிங்கம், எம் எஸ் சாகீட், எம் ஏ சி சலாம், செயலாளர்: வி ரி சிவலிங்கம், உப செயலாளர்: டி கணேசகுமார், தனாதிகாரி: ஆர் இராசலிங்கம், கணக்குப் பரிசோதகர்: டாக்டர் வி திருஞானசம்பந்தன்

15 பேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் [கொ-அ]

## மந்திகை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இடத்திற்கு அவரவர் பாத்திரங்களைப் பெற்றுச்சென்று வழங்குகிறோம். இவ்விடத்து நடக்கவியலாதவர் வயோதிபர் உட்பட அழைக்கப்படுவதில்லை. அவர்களுக்கு அவர்கள் பாத்திரங்களைச் சேவையாளரே சென்றுபெற்றுப் படுக்கையில் உணவை வழங்குகிறார்கள். இதே நிலைதான் உறங்கிய நோயாளர்களுக்கும் உணவு விடயத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது.

உறங்கியதால் உணவு இடைக்கவில்லை என்றோ நடக்க இயலாததால் உணவு வழங்கப்படவில்லை என்றோ எந்த நோயாளரும் நிர்வாகத்தினரிடம் சேவையாளரிக்குற்றம் சுமத்தியதாக அண்மைக்காலங்களில் நான் அறியவில்லை.

ஜே. ஏ. அருள்தாசன்
[விடுதிப்பரிசோதகர்]
அரசினர் ஆஸ்பத்திரி,
மந்திகை,
பருத்தித்துறை.

## "மாணவர்கள் தேசிய வளங்களில் ஒன்று"

[தெல்லிப்பழை]

"தேசிய வளம் பேணப்படவேண்டிய அவசியத்தை நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் உணரவேண்டும். தேசிய வளங்களில் ஒன்றான இன்றைய பாடசாலை மாணவர்களை உருவாக்கும் பணியில் ஈடுபடும் முக்கிய பங்கைப் பாடசாலைகள் பெற்றுள்ளன, பாடசாலையின் அபிவிருத்தியில் சகலரும் ஒன்றிணைவதன் மூலமே தான் வெற்றியை ஏற்படுத்தமுடியும்"

இவ்வாறு தெல்லிப்பழை சிதம்பரம் தமிழ் வித்தியாலய அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமைவகித்து உரையாற்றிய அதிபர் திரு எஸ். எம் மூர்த்தி குறிப்பிட்டார்.

வலிகாமம் மாவட்ட இந்து சமய ஆலோசகரும், மத்திய மாகாணச் சைவ மாசபைச் செயலாளருமான திரு ஸ்ரீதயாளனும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார் [கு]

[கொழும்பு]

வெலிசறை பாஸ்மா தொழிற்சாலையில் கடந்த மாதம் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பாக தொழிற்சாலை ஊழியர் இருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

இவர்கள் இருவரும் நேற்று வத்தளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு இம்மாதம் 27 ம் திகதிவரை விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளனர்

ஏற்கனவே கைது செய்யப்பட்டவர் இன்னமும் காவலில் வைக்கப்பட்டுள்ளார்
[இ]

கடைசி சில தினங்கள்
**வின்சர்** போன்: 466
[யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00 & 9-30
பைலட் **பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)

**REGAL** Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a. m.
RICHARD BENJAMIN
in
M.G.M's
**THE SUNSHINE BOYS**
(color)
Coming soon **OMEN**

தமிழ் மக்கள் பிரச்னை

# அரசியல் அமைப்பு தெரிவுக் கமிட்டியே முதல் வட்டமேசை மகாநாடு

## லண்டனில் பிரதமர் பிரேமதாசா விளக்கம்



இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னை குறித்து இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா லண்டன் பி. பி. ஸி. நிருபருக்கு அளித்த பேட்டியின் விபரம் இங்கே தரப்படுகிறது.

சகல கட்சிகளும் அங்கம் வகிக்கும் தெரிவுக் கமிட்டி ஒன்றைக் கூட்டி எமது நாட்டுக்கேற்ற ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதுதான் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் முதல் நோக்கமாக இருந்தது. அதன் அடிப்படையில் நாம் 1977ல் தெரிவுக் கமிட்டியைக் கூட்டினோம். இதுவே நாம் கூட்டிய முதலாவது வட்டமேசை மகாநாடு ஆகும். இத் தெரிவுக்கமிட்டியில் தமிழர் கூட்டணியினர் அங்கம் வகிக்க முன்வரவில்லை.

இந்நிலையில் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தபடி தமிழ் மக்கள் பிரச்னை பற்றி ஆராய வட்டமேசை மகாநாட்டைக் கூட்டுவதற்கு 2 வருடகாலம் தாமதம் செய்யப்பட்டுவிட்டது என்றுகூறுவது அர்த்தமற்றது.

இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா லண்டனில் பி. பி. ஸி. நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறினார்.

தாம் இலங்கையை விட்டுப் புறப்படுவதற்குச் சற்றுமுன்னர் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கமும் தாமும் கூட்டாக பயங்கரவாதத்தைக் கண்டித்து ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்ததாகவும் திரு பிரேமதாச கூறினார்.

திரு. பிரேமதாசாவின் பேட்டி விபரம் வருமாறு:

அண்மையில் இலங்கையில் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத தடை சட்டமூலம் கொடுமையானது என முன்னாள் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா விமர்சித்துள்ளாரே இதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன என நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையில் திரு. பிரேமா—

### சிறிமாவுக்கு அக்கறை இல்லை

ஆறு ஆண்டுகளுக்கு மேலாக சர்வாதிகாரியாக ஹிட்லரின் ஆட்சியை விட மோசமானதொரு ஆட்சி நடத்திய திருமதி பண்டாரநாயக்கா நாம் பதவிக்கு வந்த பின்னரே மக்கள் சுதந்திரமாக மூச்சுவிட முடிந்தது.

கசட் அறிவித்தல் மூலம் சர்வாதிகாரப் போக்குள்ள பயங்கர சட்டங்களை கொண்டுவந்ததையும் விசாரணையின்றி பலர் சிறை வைக்கப்பட்டதையும் நாம் மறந்து விடமுடியாது. இவ்வாறு ஆட்சிநடத்திய திருமதி பண்டாரநாயக்காவுக்கு கொடுமையான சட்டங்களைபற்றி பேச அருகதை கிடையாது என்றார்.

திரு. பிரேமதாச மேலும் கூறியதாவது:

எமது அரசு கொண்டுவந்த சட்டம் பயங்கரவாதத்தைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையே. பிரிட்டனில்கூட இதுபோன்ற சட்டங்கள் உள்ளன. அதனைப் பின்பற்றியே யாமும் இச்சட்டத்தை அமுலுக்கு கொண்டுவந்தோம்.

### தனிநாட்டுக் கோரிக்கை என்ற போர்வையில்....

தனிநாட்டுக் கோரிக்கை என்ற போர்வையில் ஒரு சிறிய குழுவினர் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடுப்பதுதான் எமது நோக்கம்.

### பட்டப்பகலில் பயங்கர கொலைகள்

பட்டப்பகலில் பயங்கரக் கொலைகள் நடைபெறுவதைப் பார்த்துக்கொண்டு பொறுப்பு வாய்ந்த ஒரு அரசு கண்ணை மூடிக்கொண்டிருக்க மாட்டாது.

பயங்கரவாதச் சட்டம் தமிழ் மக்களை ஏனைய சமூகங்களிலிருந்து விலகிச் செல்லத் தூண்டுமென நீங்கள் எண்ணவில்லையா?—

நான் அப்படி எண்ணவில்லை. நான் இலங்கையிலிருந்து புறப்படுவதற்குச் சற்று முன்னர்கூட எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கமும் நானும் கூட்டாக பயங்கரவாதத்தைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருந்தோம்.

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு இரு இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் எவ்வாறான தீர்வு ஏற்படும்?—

தமிழ் மக்களின் பிரச்னைகள் இறுதியில் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்படும் என்பதில் ஒருவித சந்தேகமும் எனக்கு இல்லை. ஏனெனில் எமது மக்கள் சிங்களவராயினும் சரி, தமிழராயினும் சரி, முஸ்லிமாக இருந்தாலும் சரி சகல சமூகத்தவரும் ஜனநாயகத்திலும் மதக்கோட்பாடுகளிலும் பற்றுள்ளவர்கள். மொழி, மத, இன பேதங்களினால் அவர்களைப் பிரித்து விடமுடியாது எமது மக்கள் மனித பண்பிற்கு தம்மை அர்ப்பணித்தவர்கள்.

ஆகையால் ஒரு சிறிய குழுவினரால் மேற்கொள்ளப்படும் பிரிவினை முயற்சி அவர்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லாது என்றே நான் திடமாக நம்புகிறேன்.

இலங்கையின் பொருளாதாரம் குறித்து நிருபர்கள் கேட்டபோது பதில் அளித்த திரு பிரேமதாச கூறியதாவது:

இலங்கையும் பிரிட்டனைப் போன்றே 'அதிக கட்டுப்பாடற்ற சுதந்திர பொருளாதாரக் கோட்பாடுகளையே கடைப்பிடித்து வருகிறது. இதன் காரணமாக நமது நாடு சுபிட்சமான எதிர்காலத்தை நோக்கி செல்லக்கூடியதாக இருக்கிறது.

மிகச் சமீப காலத்தில் ஆரம்பித்த சுதந்திர வர்த்தக வலயம் வெகு திருப்தியுடன் இயங்கி வருகிறது. [கு-இ]

### மனுதார்கள் நீக்கப்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இடைக்கால தடைஉத்தரவு வழங்குமாறு சமர்ப்பித்த மனுவை நிராகரித்து அளிக்கப்பட்ட தீர்ப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தத்தீர்ப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''மனுதாரரால் இணைக்கப்பட்ட யாப்புத்தான் சரியானது. அதற்கு பின்பு இந்த யாப்பு மாற்றப்பட்டதாக எதிர்மனுதார் தெரிவித்திருப்பது பிழை. ஆரம்ப யாப்புதான் சரியானது.

### காங்கிரஸ் உறுப்பினரல்ல

மனுதாரர்கள் ஆயுள்கால உறுப்பினர்கள் என்று இங்கு தெரிவிக்கப்பட்டது. தமிழ்க் காங்கிரஸ் யாப்பில் ஆயுள்கால உறுப்பினராக இருப்பதற்கு எவருக்கும் இடமில்லை. ஆதலால் மனுதாரர்கள் தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்களல்ல. சந்தாப்பணம் கட்டாததினால், எதிர்மனுதார்களும் தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்களல்ல. ஆனபடியால் 3-9-78ல் நடத்தப்பட்ட டுசயற்குழுக் கூட்டம் முறையானதல்ல. அக் கூட்டத்தில் பங்குபற்றியவர்கள் தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்களல்ல.

''அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் காலமானபின் 1ம் மனுதார் திரு. எம். சிவசிதம்பரம் தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டது சரியானது. அவர் இப்போது உறுப்பினர் பதவியை இழந்துள்ளபடியால் தலைவர் பதவி வகிக்க ஏலாது.

''3-9-78ல் நடத்தப்பட்ட கூட்டம் செல்லுபடியற்றதாக இருந்தபோதிலும், மனுதார்கள் நேரடியாக சமுகமளிக்காவிட்டாலும், அக் கூட்டத்திலே அவர்கள் நீக்கப்பட்டது நேரடியாகத் தெரியாது என்றாலும் இதை அவர்கள் வேறு வழியில் அறிந்தபடியால் அவற்றை ஆரம்பத்தில் வெளிப்படையாக விண்ணப்பத்தில் இந் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கவேண்டும். அப்படி செய்யாதபடியினால் இந்த இடைக்கால தடை உத்தரவைப் பெறமுடியாது.

''சட்டப்படி செல்லுபடியான யாப்பின்படி கூட்டத்திற்கு முறையான அறிவித்தல் கொடுக்கப்படவில்லை. பத்திரிகையில் வந்தது செய்தியேயொழிய உத்தியோகபூர்வமான அறிவித்தலல்ல.

''இருசாராருக்கும் உள்ள பிணக்கை தீர்ப்பதற்கு இந்த நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் உண்டு.

''காங்கிரஸ் யாப்புப்படி இரு பிரிவினரும் உறுப்பினரில்லாதபடியால் எவருக்கும் செலவு அறவிடப்படவில்லை (ஈ)

### நியமனம்

[புலோலி]

பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த திரு. யோகசிகாமணி ஆரம்ப நீதிமன்ற நீதவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

### வவனியா...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

''தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி அங்கீகரித்துள்ள ஜனாதிபதிக்கமிஷனில், தமிழர்விடுதலைக் கூட்டணிக்கு மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களையும் கலந்தாலோசிக்கவேண்டுமெனக் கோருகின்றோம்.

''இதனால் இலங்கைவாழ் இரண்டு சமூகங்களுக்கிடையில் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும் இனஐக்கியத்தையும் ஏற்படுத்தவும் முடியுமென நம்புகின்றோம் என்றும் தெரிவிக்கின்றோம்'' [கெ]

### மொரார்ஜி..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்துள்ளனர்.

முன்னாள் அமைச்சர்கள் பகுகுணா, ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கட்சியினரும் சரண்சிங்குக்கு ஆதரவளிப்பதென்று நேற்றிரவு அறிவித்துள்ளனர்.

இதற்கிடையே, ஜனதா கட்சியில் திரு. மொரார்ஜி தேசாய்க்கும் திரு ஜெகஜீவன்ராமுக்குமிடையே நிலவிய கருத்து வேற்றுமை நீங்கிவிட்டதாகவும், புதிய அரசை அமைப்பதில் இவர்கள் ஒருமித்த தன்மையில் தீவிரமாகவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### தமிழ்க்காங்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அபிமனசிங்கம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2ம் எதிர்மனுதார் சார்பில் சட்டத்தரணி ரி சங்கரப்பிள்ளையும் சட்டத்தரணி எஸ். செல்வராசாவும் ஆஜரானார்கள்.

3ம் எதிர் மனுதார் திரு பரமானந்தராசா சார்பில் சட்டத்தரணி ஜாக்குலின் செனிவிரத்தின, சட்டத்தரணி என் ரி சிவஞானம் ஆகியோர் ஆஜரானார்கள்.

4ம் எதிர் மனுதார் சார்பில் சட்டத்தரணி என் கே சுப்பிரமணியம் ஆஜரானார்.

மனுதார் சார்பில் சட்டத்தரணி எஸ் கதிரவேற்பிள்ளை, சட்டத்தரணி கி நடராசா, சட்டத்தரணி எஸ் உருத்திரா மூர்த்தி, சட்டத்தரணி எஸ் ஆர் விஸ்வநாதன், சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணியம், சட்டத்தரணி செல்வி பொன்னையா ஆஜரானார்கள்.

இம்மனு மீதான நிரந்தர தடைக்கான முழுவிசாரணை நவம்பர் மாதம் 12ம் தேதி நடைபெறும். [ஈ]

### இன்று நடைபெறும் வில்லிசை நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

கலைவாணர் வில்லிசைக் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சிகள் இன்று பருத்தித்துறை புலோலி பசுபதீஸ்வரன் ஆலயத்தில் நடைபெறும் வருடாந்த அம்மன் உற்சவத்தில் நடைபெறவுள்ளது. இன்று இரவு ''பார்பதி கல்யாணம்'' என்ற வரலாற்றைக் கலாவிநோதன் சின்னமணி வில்லிசையிற் கூறுவார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 165-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanadu P B No. 46 Telegrams: Eelanadu